# முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம்

F. ஷாமிலா தாவூத்
L.L.B. (Hons) Attorney-at-law, Lecturer, Faculty of Law, University of Colombo.

இலங்கையில் வாழும் சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்கள் தங்களுக்கே உரிய வழக்காறுகளையும் பண்பாடுகளையும் பலநூற்றாண்டு காலமாக பின்பற்றி வருகின்றனர். இதன் காரணமாக அவர்களது விழுமியங்களும் மாறுபட்டு காணப்படுகின்றன. இச்சமூகத்தின் மத்தியில் திருமண உறவுமுறைகள் தொடர்பில் பல்வேறு சட்ட முறைகளும் பின்பற்றப்படுகின்றன. உதாரணமாக கண்டியச் சிங்களவர்களுக்கு கண்டியச் சட்டமும் யாழ்ப்பாண தமிழர்களுக்கு தேச வளமைச் சட்டமும் முஸ்லிம்களுக்கு முஸ்லிம் சட்டமும் ஏற்புடைமை ஆகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை இடஞ்சார் அல்லது ஆள்சார் சட்டங்கள் எனப்படுகின்ற விஷேட சட்டங்களாகும். இவ்வாள்சார் சட்டங்களுக்கு உட்படாத ஏனைய அனைவருக்கும் இலங்கையின் பொதுச் சட்டமான பொது திருமண கட்டளைச் சட்டம் (General Marrige Ordinance) ஏற்புடையதாகின்றது.

ஆள்சார் சட்டங்கள் வெறுமனே திருமணம், விவாகரத்து மற்றும் அதனுடன் சார்ந்த விடயங்களுக்கு மாத்திரமே பிரயோகிக்கப்படுகின்றன. முஸ்லிம்கள் எம்மூளையில் வாழ்ந்தாலும் அவர்களுக்கு முஸ்லிம் சட்டமே பிரயோகிக்கப் படுகின்றது. ஆகையால் முஸ்லிம்கள் பொதுச்சட்டத்தின் கீழ் திருமணம் செய்யப்பட வேண்டும் என்ற தேவைப்பாடில்லை. 1951ஆம் ஆண்டு 13ம் இல. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் (Muslim Marrige and divorce Act No 13 of 1951), இலங்கையில் வாழுகின்ற முஸ்லிம்களுக்கு திருமணம், விவாகரத்து மற்றும் அவற்றுடன் தொடர்பான விடயங்களுக்கு ஏற்புடையதாகும் என இச்சட்டத்தின் பிரிவு 2 குறிப்பிடுகிறது. இருப்பினும் முஸ்லிமொருவர் முஸ்லிம் சட்டத்திற்கு அமைவாக திருமணம் செய்யாவிடின் அவருக்கு மேற்கூறிய சட்டம் ஏற்புடையதாக மாட்டாது என்பது குறிப்பிடத் தக்கதே.

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் நிக்கா∴ (திருமணம்) என்பது ஒரு நிலையான உறவு முறையின் அடிப்படையில் ஏற்படுகின்ற ஒரு ஒப்பந்தம் என வரையறுக்கின்றது. இவ்வொப்பந்தம் ஆண், பெண் இருபாலாரின் கடமை மற்றும் உரிமைகளை குறிப்பிடுகின்றது.

திருமணத்தின் சிறப்புப் பற்றி நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு நவின்றுள்ளார்கள். ''ஒருவர் திருமணம் செய்து கொண்டால் அவர் மார்க்கத்தில் ஒரு பகுதியை பேணிக் கொண்டவர். மறுபகுதியை அவர் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்வா ராக.''

மேலும் ''திருமணம் புரிவது எனது வழிமுறையாகும். எவர் எனது சுன்னத்தை புறக்கணிக்கிறாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்லர்.'' என மேலும் திருமணத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறியுள்ளார்கள்.

திருமறையாம் திருக்குர்ஆனும் திருமணத்தைப் பற்றி பின்வருமாறு எடுத்தியம்புகிறது.

''உங்களிலிருந்து உங்களுக்காக மனைவியரை அல்லாஹ் ஆக்கியுள்ளான். உங்கள் மனைவியரிலிருந்து ஆண்மக்களையும் பேரக்குழந்தைகளையும் உங்களுக்கு அவன் ஆக்கியுள்ளான். இன்னும் நல்லவற்றிலிருந்து உணவளித்துள்ளான்.''
16:72

மேலும் ''உங்களில் (ஆண்களிலும், பெண்களிலும்) தனித்திருப்பவர்ளுக்கு மணமுடித்து வையுங்கள்'' 24:33
என அல்லாஹ் கட்டளையிடுகின்றான். அவன் யாவற்றையும் அறிந்தவனாக இருக்கின்றான்.

இவற்றை வைத்து நோக்குகின்ற போது திருமணத்தினை ஒரு புனித ஒப்பந்தமாக அல்லது ஒரு உடன்படிக்கையாக இஸ்லாம் வர்ணிக்கின்றது. திருமணம் செய்வதற்கான சரீர மற்றும் பொருளாதார தகுதியீனம் ஏதும் இல்லாத சந்தர்ப்பத்தில் திருமணம் செய்து கொள்வதன் அவசியத்தை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. ஒரு சிறந்த சமுதாய கட்டுக்கோப்பிற்கும் நல்வாழ்வுக்கும் ஒரு தனிமனிதனின் தனிப்பட்ட வாழ்விற்கும் திருமணம் அவசியமானதொன்றாகும் என்ப

தோடு ஒரு அழகிய இஸ்லாமிய சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கும் ஒரு அங்கமாக திருமணம் அமைகிறது என்பதில் ஐயமில்லை.

இவையனைத்தும் திறன்பட செயற்பட அங்கு ஒரு வலிதான திருமணமொன்று அவசியமாகும். அவ்வாறான ஒரு வலிதான திருமணமொன்று அமையப்பெற சில சட்ட திட்டங்களை அத்திருமணம் பூர்த்தி செய்ய வேண்டி காணப்படுகின்றது. இருமணம் இணைதல் திருமணம் எனப்படுகிறது. ஆனால் இருமணம் இணைந்தால் மாத்திரம் அது ஒரு வலிதான திருமணமாக அமையாது. அங்கு வயது, தடுக்கப்பட்ட உறவுமுறை, தடுக்கப்பட்ட காலம், திருமணப்பதிவு, சாட்சி, வலி என்பன இஸ்லாமிய திருமண முறைமைக்கு அவசியமான தேவைப்பாடுகளாகும். இவ்வாறான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத விடத்து அத்திருமணம் அதன் வலிதுடைமையை .இழக்கும். அவ்வாறான வலிதற்ற அல்லது ஒழுங்கீனமான திரு மணத்தின் மூலம் எவ்வித உரிமைகளையும் பெற முடியாது என்பதோடு பராமரிப்புச் செலவுகளையும் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த நேரிடும். அதுமட்டுமன்றி கணவனின் வழியுரிமை ஆதனத்திலும் உரிமை கோர முடியாது. அவ்வாறான திருமணத்தின் மூலம் பிறக்கின்ற பிள்ளைகள் நெறிமுறையற்ற பிள்ளைகளாகக் கருதப்படுவர். இஸ்லாம் நெறிமுறையற்ற பிள்ளைகளைப் பெறுவதை வன்மையாக தண்டிக்கிறது, தடுக்கிறது.

### *சட்டரீதியான திருமணத்திற்கான தேவைப் பாடுகள்*

1951 ஆம் ஆண்டு 13ம் இலக்க முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டமானது இலங்கை முஸ்லிம் ஒருவர் திருமணஞ் செய்வதாயின் அவர் பல சட்ட ரீதியான தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டுமென கூறுகிறது. அதில் திருமணத் திற்கான சட்டரீதியான வயதை ஓர் ஆணோ அல்லது பெண்ணோ எய்தியிருத்தல் வேண்டும் என்பதாகும். இலங்கையின் ஏனைய சட்டங்களின் படி ஒரு பெண்ணின் திருமண வயதெல்லை 18 ஆகும். எனினும் முஸ்லிம் சட்டத்தில் இது 12 வயதாக குறைக்கப்பட்டிருக்கின்றது. அப்பெண் 12 வயதினை பூர்த்தியடையாத சந்தர்ப் பத்தில் காதியின் அனுமதியின்றி திருமணத்தை பதிவு செய்ய முடியாது என இச்சட்டத்தின் பிரிவு 23 குறிப்பிடுகின்றது. அவ்வாறு பதிவு செய்தல் தண்டிக்கப் படக்கூடிய குற்றமாகும். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 23 குறிப்பிடுகின்றது. அவ்வாறு பதிவு செய்தல் தண்டிக்கப் படக்கூடிய குற்றமாகும். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 25 (1) ன் படி ஷாபி பிரிவைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது திருமணத்திற்கான சம்மதத்தினை வலி மூலம் தெரிவிக்க வேண்டும். பிரிவு 1(a) படி வலி திருமண ஒப்பந்தம் நடைபெற இருக்கின்ற இடத்திற்கு சமுகம் தந்து மணப்பெண்ணின் சம்மதத்தை தெரிவிக்க வேண்டும். இப்பிரிவிற்கு அமைவாக நடைபெறவில்லையாயின் அத்திருமணத்தை பதிவு செய்ய முடியாது என அதே பிரிவின் உபபிரிவு 2 குறிப்பிடுகிறது. எவ்வித காரணமும் இல்லாமல் வலி திருமணத் திற்கான சம்மதத்தினை வழங்க மறுப்பின் குறிப்பிட்ட பெண் காதிக்கு மனுச் செய்யலாமென பிரிவு 47 (2) ஏற்பாடு செய்கிறது. பெண்ணுக்கு பாதுகாவலர் இல்லாத போது காதி சம்மதம் வழங்கலா மென பிரிவு 47 (3) கூறுகிறது. பல தீர்க்கப்பட்ட வழக்குகளின் படி பாதுகாவலரின் சம்மதமில்லாமல் செய் யப்பட்ட திருமணங்கள் வலிதற்றது என தீர்க்கப்பட்டுள்ளது. வலி பொதுவாக கிட்டிய உறவு முறையின் அடிப்படையில் வந்தவராவார். வலி என்பவர் இஸ்லாமிய திருமணமொன்றின் வலிதுடைமையை தீர்மாணிப்பதில் முக்கிய இடத்தினை பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பராயமடையாதவர் சித்த சுவாதீனமற்றவர் மற்றும் முஸ்லிமல்லாதவர் வலியாக இருக்க முடியாது. ஆண்களைப் பொருத்த வரை தமது சம்மதத்தினை தாங்களே நேரடியாகத் தெரிவிக்கலாம். எனவே தான் ஒரு திரு மணத்தை நடத்த விருப்பமும் ஏற்றுக் கொள்ளலும் இருத்தல் என்பது அவசியமா னதொன்றாகும். இது ஒப்பந்தமொன்றின் அடிப்படை அம்சமாகும்.

அடுத்து தடுக்கப்பட்டுள்ள உறவு முறையின் அடிப்படையில் திருமணம் செய்தல் முற்றாக தடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஆணை பொறுத்த வரை மகள், பேத்தி, தாய், தாயின் சகோதரிகள் போன்றோரும் பெண்ணைப் பொறுத்த வரை மகன், பேரன், சகோதரன் போன்றோரும் அடங்குவர். இது தொடர்பாக மேற்கூறிய சட்டத்தின் பிரிவுகள் 80 (1), 80 (2) என்பன தெளிவுபடுத்துவதோடு அல்குர்ஆனும் (அத்: 4. 23,24) தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

இதே போல் பெண்ணொருவர் ஏற்கனவே திருமணம் செய்தவராக அல்லது கணவன்

இறந்திருக்காத சந்தர்ப்பத்தில் முறையாக விவாகரத்து பெற்றிருக்காத போது இரண்டாவது திருமணம் செய்தல் வலிதற்றதாகும். அதேபோல் பெண்ணின் இத்தாக் காலத்தில் செய்யப்படும் திருமணமும் பதிவு செய்யப்பட முடியாது என இச்சட்டத்தின் பிரிவு 22 குறிப்பிடுகிறது. இத்தாக் காலம் எனும் போது விவாகரத்துப் பெற்றிருப்பின் மூன்று மாத காலமும், கணவன் இறந்திருப்பின் நான்கு மாதம் பத்து நாட்களும் காத்திருக்க வேண்டிய காலப்பகுதியாகும். இக்காலப் பகுதிக்குள் செய்யப்படும் திருமணங்கள் வலிதற்றதாக கருதப்படும்.

அடுத்த தேவைப்பாடாக திருமணம் நடைபெறுவதற்கான திறத்தவர்களின் எண்ணிக்கை கவனத்திற் கொள்ளப் படுகின்றது. ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்பதே விதியாக இருப்பினும் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்ய சட்டம் அனுமதி வழங்குகிறது. மேற்கூறிய சட்டத்தின் பகுதி II பிரிவு 24 இதனை அங்கீகரிக்கின்றது. இதன்படி திருமணமான ஒரு முஸ்லிம் ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணத்தைச் செய்ய எண்ணியிருப்பின் அவர் ஆகக் குறைந்தது 30 நாட்களுக்கு முன் தான் வசிக்கும் பிரதேச காரிக்கும், தனது மனைவி அல்லது மனைவிமார்கள் வசிக்குமிடத்திலுள்ள காதி அல்லது காதிகளுக்கும் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். இவ்வறிவித்தலில் மேற்கூறியவர் களின் (மனைவி/கள்) முழுப்பெயர், முகவரி என்பனவற்றையும் குறிப்பிடல் வேண்டும். இதன் பின், இதன் பிரதியில் ஒன்றை இப்பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு ஜும்ஆப் பள்ளியிலும் ஒட்டப்படலும் வேண்டும். இவ்வாறு அறிவித்தல் கொடுக்கப்படாது விடின் அத்திருமணத்தை பதிவு செய்தல் முடியாது. அவ்வாறு அறிவித்தல் கொடுக்காது பதிவு மேற்கொள்ளப்படுமாயின் அது தண்டிக்கப் படக் கூடிய குற்றமாகும். இவ்வேற்பாடு ஒன்றுக்கு மேற்பட்ட திருமணத்தை செய்வதாயின் மாத்திரம் பின்பற்ற வேண்டியதாகும்.

இஸ்லாம் பலதார திருமணத்தை சில காரணங்களுக்காக அனுமதித்த போதிலும் தனது மனைவி மார்களுக்கிடையே சமத்து வத்தை நிலை நாட்டும் படி வேண்டுகிறது. சமத்துவம் எனும் போது அவர்களிடையே உணவு, உடை, அன்பு, பிரிவு என்பன சமனாக வழங்கப்பட வேண்டும். எனவேதான் அல்குர்ஆன் பின்வருமாறு நிபந்தனை விதிக்கின்றது.

''ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிய ரிருந்தால் அவர்களிடையே நீதத்தைக் கடைப்பிடியுங்கள். நீதமாக நடக்க முடியாது என்று நீங்கள் அஞ்சினால் ஒரு மனைவியே போதும்''.(4:3) இந்நிபந்தனையை சரிவர நிறைவேற்றாமல் பலதார மணத்திற்கான அனுமதியை பயன்படுத்திக் கொள்பவன் இறை கட்டளைக்கு துரோகம் செய்பவனா வான்.

''இறை நம்பிக்கை கொண்டவர்களே நீங்கள் நீதியைக் கடைபிடியுங்கள். அல்லாஹ்வுக்காக சான்று வழங்குபவரா கவும் இருங்கள்'' (4:135)

அடுத்த தேவைப்பாடு நிக்கா∴ சடங்கு நடத்தப்பட வேண்டும் என்பதுடன் அதில் பதியப்படலும் வேண்டும். நிக்கா∴ சடங்கு நடைபெற்றவுடன் பதிவு செய்யப்பட வேண்டுமென பிரிவு 17 குறிப்பிடுகின்றது. நிக்கா∴ சடங்கு நடைபெற விருக்கும் இடம், நேரம், திகதி என்பன சம்பந்தமாக பதிவாளருக்கு முன் அறிவித்தல் கொடுக்க வேண்டும். திறத்தவர்களின் பெயர்கள், நிக்கா∴ நடைபெற்ற திகதி, நேரம், இடம், வலியின் பெயர் மற்றும் நிக்கா∴ சடங்கு நடத்தி வைப்பவரின் பெயர் என்பன அப்பதிவில் குறிப்பிடல் வேண்டும். இதில் மணமகள், வலி, நிக்கா∴ சடங்கை நடத்தி வைப்பவர், இரண்டு சாட்சிகள், பதிவாளர் போன்றோர் கையொப்பமிடலும் வேண்டும். பிரிவு 71படி அவ்வாறு பதிவு செய்யப்பட்ட பிரதியானது விவாகம் மற்றும் விவாகரத்து தொடர்பில் சிறந்த சான்றாக எல்லா நீதி மன்றங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதால் திருமணத்தை பதிவு செய்வது அவசிய மாகும்.

### *திருமணத்தின் போது கொடுக்கப்படும் கொடுப்பனவுகள்*

முஸ்லிம்களுக்கிடையிலான திருமணங் களை பொறுத்த வரையில் அவர்களுக் கிடையே மஹர் மற்றும் கைக்கூலி திருமணத்தின் போது மணமகன் தன் சார்பாக மணமகளுக்கு வழங்கும் செல்வத்திற்கோ அல்லது உடைமையிற்கோ மஹர் எனப்படுகின்றது. முஸ்லிம் சட்டப்படி திருமணம் நிறைவேற இது கட்டாய நிபந்தனையாகும். இதன் மூலம் ஒரு முஸ்லிம் பெண் திருமணத்தின் போது ஏதோ

ஒரு சொத்துக்கு முழுச்சொந்தக்காரர் ஆகிறார். அத்தோடு இம்மஹர் அவளின் மதிப்பையும் கூட்டுவதோடு சமத்துவத் தையும் பேணுகிறது. இதனை மணமகள் தான் விரும்புவர்களுக்கு அதனைக் கொடுப்பதற்கும் பூரண உரிமையைக் கொண்டிருக்கிறாள். எனவேதான் திருமணத் தின் போது மஹர் ஓர் கட்டாய கொடுப்பனவாக இருக்கிறது. இதனைப் பற்றி அல்லாஹ் குர்ஆனிலே பின்வருமாறு தெளிவாக குறிப்பிடுகின்றான்.

*''பெண்களுக்கு அவர்களுக்குரிய மஹரைக் கட்டாயமெனக் கருதி மனமுவந்து அளித்து விடுங்கள்..'' (அந்நிஸா : 4:4)*

அவர்கள் விரும்பினாலன்றி கொடுக் கப்பட்ட மஹரில் இருந்து சிறிதளவேனும் திருப்பி வாங்காதீர்கள் என மேலும் குறிப்பிடுகின்றது. ஆகவேதான் மணமகள் மஹர் வழங்கப்படாத வரையும் திரு மணத்தை மறுக்கலாம். மஹர் பெற வழக்காடலாம். அது தொடர்பில் காதியின் உதவியை நாடலாம் என்பதனை 1951ஆம் ஆண்டு 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் பிரிவுகள் (37,38,47) குறிப்பிடுகின்றன. திருமணப்பந்தத்தில் இணைய முன்பு விவாகரத்து பெற நேரிடுஞ் சந்தர்ப்பத்தில் மஹரின் அரைப்பகுதியை கொடுக்கும் படி அல்குர்ஆன் வேண்டுகிறது.

"....(திருமணம் செய்த பெண்களான) அவர்களை நீங்கள் தீண்டுவதற்கு முன், அவர்களுடைய மஹரை நீங்கள் குறிப்பிட்டு நிர்ணயம் செய்திருக்க, நீங்கள் அவர்களை விவாகரத்து செய்து விட்டால், (அப்பெண்களாகிய) அவர்கள் (விட்டுக் கொடுத்து) மன்னித்து விட்டாலோ, அல்லது யாருடைய கையில் திருமண பந்தமிருக்கிறதோ, அவர் (விட்டுக் கொடுத்து) மன்னித்து விட்டாலோ அன்றி, நீங்கள் நிர்ணயம் செய்ததில் பாதி அப் பெண்களுக்கு உண்டு..."(2:337)

'ஷாபி பிரிவின் படி மஹர் கட்டாயமாக அசையும் அல்லது அசையாச் சொத்தா கவோ அல்லது ஒரு தொகை பணத்தை வழங்குவதாகவோ இருக்கவேண்டிய அவசியமில்லை. மாறாக ஒரு சேவையை வழங்குவதாகவோ அல்லது ஒரு கடமையை செய்வதாகவோ இருக்கலாம். சேவை யொன்றை வழங்குவதாக உடன்பட்டுக் கொண்டால் குறிப்பாகவும் நிச்சயமானதாக வும் செயற்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் அவசியம். ஹனபி பிரிவின் படி மஹரானது திருமணத்தின் போது உடனடியாக கொடுக்கப்பட வேண்டும் எனப்படுகிறது.

மேலும், இலங்கை முஸ்லிம்களுக் கிடையே கைக்கூலி வழங்கும் முறையொன்று காணப்படுகின்றது. கைக் கூலி என்பது மணமகளின் உறவினரால் மணமகனுக்கு பணம், அசையும் ஆதனம் அல்லது அசையா ஆதனம் எதனையாவது கொடுப்பதாக வழங்கும் வாக்குறுதியாகும். இருப்பினும் முஸ்லிம் சட்டத்தில் கைக்கூலி வழங்கவது ஒரு முக்கியத் தேவைப்பா டொன்றாக என்றுமே சித்தரிக்கப் படவில்லை. ஆனால் வழக்கத்தில் அது முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. வேடிக்கை என்னவெனில் சிறியதொரு தொகையை மஹராக கொடுத்து விட்டு பெரியதொரு தொகை கைக்கூலியாக எதிர்பார்க்கின்றனர். திருமணத்தின் போது உடன்பட்ட கைக்கூலி எனப்படும் சீதனத்தை தர மறுத்ததன் காரணத்தினால் எத்தனையோ திருமணங்கள் விவாகரத்தில் முடிவடைந்துள்ளன. அதுமட்டுமன்றி அழகிய குடும்ப வாழ்க்கையில் எத்தனையோ முரண்பாடுகள், வேற்றுமைகள், மனக்கசப்புக்கள் தோன்றுவதற்கும் இஸ்லாத்தில் அவசியம் எனக் கருதப்படாத கைக்கூலி வழிவகுக்கின்றது. எனினும் இஸ்லாம் பெண்ணின் பெற்றோர்களால் பெண்ணுக்கு வழங்கப்படும் நன்கொடைகளை ஒரு போதும் தடைசெய்ததில்லை.

ஆரம்ப காலத்தில் பெண்ணானவள் அடிமையாக கருதப்பட்டு அவளுக்கு எவ்வித உரிமையும் வழங்கப்படா விட்டாலும் கூட நபி (ஸல்) அவர்களின் வருகையின் பின்னர் பெண்ணின் தனியுரிமை பாதுகாக்கப்பட்ட தோடு அவளும் சமத்துவமாக நடாத்தப் பட்டாள். இதற்குச் சிறந்த உதாரணமாக ஒரு பெண் திருமணத்தின் பின்னரும் தனது சொத்துக்கு தானே முழு உரிமையும் கொண்டவளாக காணப்படுகிறாள் என்ப தோடு திருமண பந்தத்தில் இணைகின்ற போதே மஹர் என்ற ரீதியில் ஏதோ ஒரு சொத்துக்கு சொந்தக்காரி ஆகிறாள் என்பதனைக் குறிப்பிட முடியும்.

### *விவாகரத்து*

இவ்வாறாக அழகிய முறையில் செய்யப்பட்ட திருமணங்கள் சில சமயங்

களில் விவாகரத்தில் முற்றுப் பெறுகின்றன. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் விவாகரத்தினை பெற முடியாது. குறிப்பிட்ட விடயங்களின் நிமித்தமே பெறமுடியும். திருமணத்தின் மூலமே ஒரு புதிய இஸ்லாமிய வழி மறையினை ஏற்படுத்த முடியும். அவ்வாறான அழகிய இஸ்லாமிய விழுமியங்களைத் தொடர்ந்து கொண்டு செல்கின்ற வழிமுறையினை உருவாக் குகின்ற திருமணமானது குலைக்கப்படுவது மனக்கசப்பான ஒரு விடயமாகும். பிணக்குகள் ஏற்படுகின்ற போது சமாதானமாக தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். மேலும் விவாகரத்தானது கடைசி உபாயம் என திருக்குர்ஆன் கூறுகிறது. ஆகவே எந்நிலையிலும் தயாள குணத்துடன் நடந்து கொள்ள மறந்து விடக்கூடாது.

• “விசுவாசம் கொண்டோரே பெண்களை பலவந்தமாக நீங்கள் அனந்தரம் கொள்வது உங்களுக்கு ஆகுமானதல்ல. இன்னும் பகிரங்கமாக யாதொரு மானக்கேடான காரியத்ததை அவர்கள் செய்தாலன்றி உங்கள் பெண்களுக்கு நீங்கள் கொடுத்ததில் சிலவற்றை எடுத்துக் கொண்டுபோவதற்காக அவர்களை நீங்கள் தடுததும் வைக்காதீர்கள். மேலும், அவர்களுடன் அழகான முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களை நீங்கள் வெறுத்துவிடுவீர்களானால் நீங்கள் ஒன்றை வெறுக்கக் கூடும் அதில் அல்லாஹ் ஆனேக நன்மைகளை அக்கக்கூடும்”(4:19).

• விவாகரத்தினை கணவனாலோ அல்லது மனைவியினாலோ அல்லது ஒத்தமன இசையின் அடிப்படையிலோ பெற முடியும். முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 27 இன் படி கணவனால் விவாகரத்து பெறப்படுதல் பற்றிக் குறிப்பிடுகின்றது. கணவனால் பெறப்படுகின்ற விவாகரத்து “தலாக்” எனப்படுகிறது. இது கைமீட்கக் கூடியது கைமீட்க முடியாதது என இரண்டாக பிரிக்கலாம். கைமீட்கக் கூடியது என்பதன் கருத்து ஒரு முறை தலாக் சொன்னதன் பின் பெண்ணின் இத்தாக் காலம் முடிவதற்குள் அதே பெண்ணுடன் வாழ விரும்பினால் முறைப்படி பழைய நிலையை மீட்டிக் கொள்ள முடியும். அவ்வாறின்றி மூன்று முறை தலாக் சொல்லப்படுமாயின் கணவன் திரும்ப அப்பெண்ணுடன் வாழ நினைத்தால் சில கடுமையான நடவடிக்கைகளை பின்பற்ற நேரிடும். இவ்வாறு மூன்று முறை சொல்லப்பட்டதன் பின்பு கைமீட்க முடியாத நிலை ஏற்படும். இதனை தவிர்ப்பதற்காகவே ஒரு முறை தலாக் சொல்வது சிறந்ததாக தெரிவிக்கப்படுகிறது. தலாக் பெறுவதைத் தவிர வேறு உபாயம் இல்லையென்கிற போது நன்முறையில் தலாக் கூறி விடுவித்துக் கொள்ளுங்கள் என அழகிய போதனைகளைக் கொண்ட அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

‘‘மீட்டுக் கொள்ள உரிமை பெற்ற) ‘தலாக்’ இரு தடவைகளாகும்; பின்னர் முறைப்படி தடுத்து வைத்துக் கொள்ளலாம். அல்லது (மூன்றாவது முறையாக தலாக் கூறி) நன்முறையில் விட்டுவிடலாம்...” (2:228)

மேலும், திருக்குர்ஆன்;

‘‘...உங்கள் மனைவிகளை நீங்கள் மீட்கக்கூடிய தலாக் கூறி அவர்கள் தங்கள் இத்தாவின் தவணையை அடைந்து விட்டால், அவர்களை முறைப்படி மீட்டு மனைவியராக தடுத்து வைத்துக் கொள்ளுங்கள்; அல்லது நன்முறையில் விட்டுவிடுங்கள். ஆனால், நீங்கள் வரம்புமீறி இடையூறு செய்வதற்காக அவர்களை தடுத்து வைத்துக் கொள்ளாதீர்கள். இவ்விதம் எவரேனும் செய்தால், திட்டவட்டமாக அவர் தமக்குத்தானே அநீதி இழைத்துக் கொண்டார். மேலும், நீங்கள் அல்லாஹ்வுடைய வசனங்களை பரிகாசமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். மேலும், உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருட் கொடையையும், வேதத்திலிருந்தும் ஞானத்திலிருந்தும் உங்கள் மீது இறக்கி அதனைக் கொண்டு உபதேசிக்கிறான் என்பதையும் நினைவு கூறுங்கள். மேலும், அல்லாஹ்வுக்கு பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிகிறவன் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். (2:231)

கணவனால் விவாகரத்து செய்யப் படுகின்ற போது இச்சட்டதின் இரண்டாவது அட்டவணை பின்பற்றப்படல் வேண்டும்.

இதன் படி கணவனால் விவாகரத்து பெற எண்ணமிருப்பின் முதலில் மனைவி வசிக்கும் பிரதேசத்தில் உள்ள காதிக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும். பின் காதி அப்பிரதேசத்தில் உள்ள பெரியோர்கள், மற்றும் அவர்களின் உறவினர்களின் உதவியுடன் அவர்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பார். அவ்வாறு 30 நாட்களுக்குள் இணக்கத்தை ஏற்படுத்த முடியாத போது கணவன் விவாகரத்தினை முன்னெடுக்க விரும்பினால்

காதி மற்றும் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் தலாக்கினை அறிவிப் பார். மனைவி சமுகம் தராத போது அவருக்கு அறிவிக்க வேண்டும். தலாக் ஏன் பெறப்பட்டது என்ற காரணம் பதிவு செய்யப்பட மாட்டாது. இணக்கம் ஏற்படாத பட்சத்தில் மனைவி கோரி னாலோ அல்லது கோரா விட்டாலோ கணவனால் வழங்கப்படாத மஹரினை காதி பெற்றுக் கொடுக்க வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட மஹரினை மனைவியின் பெயரில் வங்கியில் வைப்புச் செய்யப்படும். பின் அது தொடர்பான அறிவித்தல் மனைவிக்கு வழங்கப்படும். அவ்வாரே வழங்கப்பட்ட கைக்கூலியும் திரும்ப காதி மற்றும் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் தலாக்கினை அறிவிப்பார். மனைவி சமுகம் தராத போது அவருக்கு அறிவிக்க வேண்டும். தலாக் ஏன் பெறப்பட்டது என்ற காரணம் பதிவு செய்யப்பட மாட்டாது. இணக்கம் ஏற்படாத பட்சத்தில் மனைவி கோரினாலோ அல்லது கோரா விட்டாலோ கணவனால் வழங்கப் படாத மஹரினை காதி பெற்றுக் கொடுக்க வேண்டும். அவ்வாறு மெனைவிக்கு வழங்கப்படும். இத்தாக் காலம் முடியும் வரை பராமரிப்புச் செலவை பெற்றுக் கொள்ள முடியும். அதே போன்று பெண்ணானவள் பிள்ளைப்பேறு உண்டாகி இருப்பின் பிரசவிக்கும் வரை பராமரிப்புச் செலவினை பெற்றுக் கொள்ள உரித்துடையவள். இதனை அல்குர்ஆன் மிகவும் தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

‘‘விவாகரத்து செய்யப்பட்ட பெண் களுக்கு (தங்கள் இத்தாக் காலங்களில்) முறைப்படி (கணவனுடைய சொத்திலிருந்தே உணவு, உடை போன்றவைக்காக) செலவினம் பெறப் பாத்தியம் உண்டு; செலவினம் கொடுப்பது பயபக்தியுடையோர் மீது கடமையாகும்’’ (2:241)

முஸ்லிம் மனைவியொருவர் கீழ்த்தரமான நடத்தைக்கு அல்லது முஸ்லிம் சட்டத்தின்படி தவரான ஒரு விடயத்தினை செய்தார் அல்லது செய்யாமல் விட்டார் என்ற அடிப்படையில் மனைவியொருவர் தனது கணவனிடமிருந்து விவாகரத்தினை பெறலாம் என முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் பிரிவு 28 (1) ஏற்பாடு செய்கிறது. அவ்வாறான

• சந்தர்ப்பத்தில் இச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணை பின்பற்றப்பட வேண்டும். இவ்விவாகரத்து தொடர்பில் மனைவி வசிக்கும் இடத்தில் உள்ள காதிக்கு அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும். சமாதானம் ஏதும் ஏற்படவில்லையாயின் காதி விவாகரத்தினை பதிவு செய்வார்.

• பெண்னொருவர் விவாகரத்தினை பெற விரும்பின் கணவனுக்கு ஒரு தொகை பணத்தைக் கொடுத்து விவாகரத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு பெற்றுக் கொள்ளும் முறையை ‘குல்’ எனப்படும்.

• இதனை இச்சட்டத்தின் பிரிவு 28 (2) ஏற்பாடு செய்கிறது. இருவரினதும் சம்மதத்தின் மூலமும் விவாகரத்தினை பெறுவதற்கு இச்சட்டம் அனுமதிக்கிறது.

• இஸ்லாம் மனித உரிமைகளை மதிக்கும் உன்னத மார்க்கம் என்பதால் விவாகரத்து தொடர்பில் ஆண் பெண் இரு பாலாருக்கும் சமத்துவமான உரிமைகளை வழங்கியுள்ளது. ஆகவே அழகிய இஸ்லாமிய கருத்துக்களையும் போதனைகளையும் பின்பற்றி சிந்தித்து செயற்பட்டு எமது வாழ்வினை இன்புற அமைத்துக் கொள்ளும் பொறுப்பு எம்மைச் சார்ந்ததே.

• ‘‘நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள் மனைவிகளை நீங்கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்து உங்களுக் கிடையில் அன்பையும் கிருபையையும் ஆக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்தாருக்கு இதில் நிச்சயமாக பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (30:23)

• ஹலாலானவைகளில் அல்லாஹ் வுக்கு மிகவும் வெறுப்பான காரியம் தலாக் ஆகும். ஆதலால் குடும்ப வாழ்வில் பிரச்சினை ஏற்படுகின்ற போதெல்லாம் விவாகரத்தினை நாடுவது சிறந்ததல்ல. இயன்றளவு விவாகரத்தினை தவிர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டிய கடப்பாடு எம்மில் உண்டு.

## REFERENCE


- Ameen, A.H.G. The Quazi Court Procedure & Practice, AlAmeen Law Center, Colombo.
- Jaldeen, M.S (2004) The Muslim Law of Marriage Divorce & Maintenance in Sri Lanka, Haji Omar Foundation for Peace, Education and Research, Colombo.
- Hussain, M.A.M. (1969) Islamic Concept of Marriage and Divorce, Spik Publication
- Lal Mohd, Marriage and Divorce in Islam, Religious Tolerance Org, http://WWW.religioustolerance.org/mohd.htm
- Divorce, Based on Qura'n, WWW.submission.org/women/
- Aminah's world of Islam, Importance of Marriage in Islam, http://WWW.muslimtents.com/aminahsworld/index.html
- Muslim Marriage and Divorce Act No 13 of 1951
- The Holy Qura'n Tamil Translation, Al Madeena.